**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 233/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 1 |
| Name : | திருமதி. சுமதி |
| Husband Name: | திரு. அருள் |
| Village : | ஒலைப்பாடி |
| Taluk : | குன்னம் |
| Age : | 39 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.08.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரிகள் 1, 2 ஆஜர் இல்லை அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஓலைப்பாடி கிராமத்தில் அங்கன்வாடியில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். எதிரிகள் இளையராஜா, ராமசாமி, தங்கதுரை ஆகியோரை தெரியும். எதிரி இளையராஜாவுக்கு எனது நாத்தனார் சித்ராவை திருமணம் செய்து கொடுத்தோம். எனது நாத்தனார் சித்ரா தற்போது உயிருடன் இல்லை. அதன்பிறகு எங்களுக்கும் எதிரி இளையராஜாவுக்கும் இடையே சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. எதிரிகள் இளையராஜாவும், தங்கதுரையும் நான் தனிமையாக இருப்பதை பயன்படுத்தி அவர்கள் சொல்வதை கேட்டு நடந்தால் தான் சொத்து கொடுப்போம் என்றும், இல்லையென்றால் கொடுக்கமாட்டோம் என்றும், தகாத முறையில் நடந்து கொண்டனர். எதிரிகள் இருவரும் அவ்வாறு நடந்து கொண்டதை நான் என் வீட்டில் உள்ளவர்களிடம் மட்டும் கூறினேன். வழக்கு சம்பவத்துக்கு 2 நாட்களுக்கு முன்பு எதிரி இளையராஜா எனது வீட்டிற்கு வந்து நான் சொல்கிறபடி நடந்து கொள்ளவேண்டும் என்றும், இல்லையென்றால் 2 நாளில் சங்கை

அறுத்துவிடுவேன் என்றும் மிரட்டினார். எதிரி தங்கதுரையின் அப்பா ராமசாமி கல்லால் அடித்து என்னை தகாத வார்த்தையால் திட்டினார். அதன்பிறகு 23.04.2018 இரவு சுமார் 7 மணியளவில் இளையராஜா தப்பு தப்பாக சொல்லி அனுப்பிவிட்டு எதிரிகள் தங்கதுரையும், ராமசாமியும் எனது வீட்டிற்கு வந்து எதிரி தங்கதுரை எனது தலைமுடியை பிடித்து கீழே தள்ளி கழுத்து பிடித்து நெறித்து என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தான் என்று சொல்லி மிரட்டினார். என் அம்மா வாலாம்பாள் தடுக்க வந்தார். தடுக்க வந்த என் அம்மா வாலாம்பாளை எதிரிகள் தங்கதுரையும், ராமசாமியும் முடியை பிடித்து இழுத்து அடித்தார்கள். பிறகு 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிசிச்சைக்காக சேர்ந்தேன். நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது போலிசார் என்னை சம்பவம் குறித்து விசாரித்தனர். நான் போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரியின் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.